இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 79 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 12 – வியாழக்கிழமை 29 அக்டோபர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 79 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 12 - Thursday 29 October 2026 - Dak 10 Pages ₹ 5.00

சிறை – பள்ளி – சாலை – நீதிமன்றம் என எங்கும் பாதுகாப்பில்லை!

த.வெ.க. ஆட்சி இருக்கும் வரை தமிழ்நாட்டுக்கு விடிவே இல்லை!

நாள்தோறும் கொலை – கொள்ளைகளை எடுத்துக்காட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 29 -

“சிறை, பள்ளி, சாலை, நீதிமன்றம் என எங்கும் பாதுகாப்பில்லை. த.வெ.க. ஆட்சி இருக்கும் வரை தமிழ்நாட்டுக்கு விடிவே இல்லை” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் பட்டப்பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டது குறித்து தமது சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் விஜயின் த.வெ.க. ஆட்சி அமைந்தது முதலே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நாள்தோறும், அரிவாள் வெட்டு, கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. இதனால் மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் தலைநகர் சென்னை உட்பட பல்வேறு இடங்களில் கொலை சம்பவங்கள், அரிவாள் வெட்டு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மயிலாப்பூரில் பட்டப்பகலில் நடு



ரோட்டில் வைத்து இளைஞர் வெட்டிக் கொலை, கடன் தொகையை திருப்பித் தராததால் அமைந்தக்கரையைச் சேர்ந்த பெண் கழுத்தறுத்து கொலை, தூத்துக்குடியில் சுமைத்தூக்கும் தொழிலாளி கோடாரியால் வெட்டிக் கொலை, விழுப்புரம் அருகே இளைஞர் வெட்டிப் படுகொலை, விருதுநகரில் ஒருவர் பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொலை, சேலத்தில் ரியல் எஸ்டேட் அதிபர் வெட்டிக் கொலை, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை நீதிமன்றத்தில் வழக்கில் ஆஜராக வந்த இளம் பெண்ணுக்கு அரிவாள் வெட்டு, சென்னை ராயப்பேட்டையில் பிரியாணி கடை ஊழியருக்கு அரிவாள் வெட்டு என எண்ணற்ற கொலை சம்பவங்களும், அரிவாள் வெட்டு சம்பவங்களும் அரங்கேறி மக்களை அதிர்ச்சியிலும், அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளன.

இதேபோல், சிறைச்சாலைகளில் இருந்து அடுத்தடுத்து கைதிகள் தப்பி ஓட்டம் என தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

சிறை, பள்ளி, சாலை, நீதிமன்றம் என எங்கும் பாதுகாப்பில்லை!

இதைப் பற்றி எல்லாம் முதல்வருக்கு அக்கறை இல்லை. அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல் இல்லை. குற்றவாளிகளுக்கு பயமில்லை.



த.வெ.க. ஆட்சி இருக்கும் வரை தமிழ்நாட்டுக்கு விடிவே இல்லை!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மகளிருக்கான வெற்றி இலவசப் பயண திட்டம்:

கடும் நிதி நெருக்கடியில் அரசு போக்குவரத்துக் கழகங்கள்!

டீசல் – உதிரிப்பாகங்கள் வாங்க நிதியின்றி தவிப்பு!

சென்னை, அக். 29 -

மகளிருக்கான வெற்றி இலவச பயண திட்டத்தை செயல்படுத்த 12 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என அரசு போக்குவரத்து கழகங்கள் கோரிக்கை விடுத்த நிலையில், 6,000 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப் படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சாதாரண கட்டண பஸ்களில் மகளிர் இலவச பயண திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது வெற்றிப் பயணம் என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி மாநகர, நகரப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண, சொகுசு பஸ்களிலும், மாவட்டங்களுக்கு இடையேயான புறநகர் மற்றும் மலைப்பகுதி சாதாரண கட்டண பஸ்களிலும் மகளிருக்கு இலவச பயணம் அனுமதிக்கப்படுகிறது.

தமிழகம் முழுதும் 12 ஆயிரத்து 695 பஸ்களில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்யலாம். வெளியூர் செல்லும் ஏசி விரைவு பஸ்களைத் தவிர மற்ற பஸ்களில் பெண் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

மொத்தமுள்ள 340 பணிமனைகளில் ஒவ்வொரு போக்குவரத்து பணிமனையிலும் 1.50 லட்சம் முதல் 2 லட்சம் ரூபாய் வரை வசூல் குறைந்துள்ளது. இந்த இழப்பைச் சரிக்கட்ட அரசு சார்பில் போக்குவரத்து கழகங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் இதுவரை போக்குவரத்து கழகங்களுக்கு அரசு ஒரு ரூபாய் கூட விடுவிக்கவில்லை. சில பணிமனைகளில் டீசல், உதிரிபொருட்கள் வாங்குவதற்குக் கூட பணம் இல்லாததால் கடும் சிரமத்தில் சிக்கியுள்ளன. இதற்கிடையே அரசு போக்குவரத்து கழகங்கள் கேட்ட தொகையில் 50 சதவீதம் மட்டுமே தர அரசு சம்மதம் தெரிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது: -

ஒரு ரூபாய் கூட இதுவரை விடுவிக்கவில்லை!

கடந்த ஆட்சியில் 7,000 சாதாரண கட்டண பஸ்களில் மட்டும் மகளிருக்கு இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. அதற்கு ஈடாக ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய் தமிழக அரசு வழங்கியது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்தத் தொகையைப் படிப்படியாக விடுவித்தது.

இதனால் அரசு போக்குவரத்து கழகங்களுக்குப் பெரிய அளவில் நெருக்கடி இல்லாமல் இருந்தது. தற்போது இந்தத் திட்டத்தை வெற்றிப் பயணம் என்ற பெயரில் விரிவாக்கம் செய்து தமிழகம் முழுதும் மொத்தமாக 12 ஆயிரத்து 695 பஸ்களில் இலவச பயணம் அளிக்கப்படுகிறது.

தினமும் 84.32 லட்சம் பேர் வரை பயணம் செய்து வருகின்றனர். ஒவ்வொரு பெண் பயணியருக்கும் அவரது பயணத்தைக் கணக்கீடு செய்து டிக்கெட் தொகை வழங்க வேண்டும். பின்னர் இதற்கான தொகையைத் தமிழக அரசு விடுவிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் வரை செலவாகும் என மதிப்பீடு செய்து தமிழக அரசிடம் அறிக்கை அளிக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தொகையில் 6,000 கோடி ரூபாய் வரை மட்டுமே வழங்க அரசு உறுதி அளித்துள்ளது. மீதமுள்ள தொகை குறித்து அரசு எதுவும் தெரிவிக்கவில்லை. அதிலும் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கவில்லை. மேலும் எப்போது வழங்கப்படும் என்பது குறித்தும் தெரிவிக்கவில்லை.

இந்தத் தொகை அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டால் பஸ்கள் இயக்குவதில் சிக்கல் ஏற்படும். எனவே பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக அரசு முன்கூட்டிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

சாதாரண கட்டண பஸ்கள் குறைப்பு தொடர்பாக ஆண் பயணிகள் சிலர் கூறியதாவது: -

சாதாரண பேருந்துகள் குறைப்பு!

சாதாரண கட்டண பஸ்களில் மட்டும் பெண்களுக்கான இலவச பயணம் இருக்கும்போது அந்த வகை பஸ்கள் அதிகரித்து இயக்கப்பட்டன. தற்போது கடந்த சில வாரங்களாக சாதாரண கட்டண பஸ்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ஆண் பயணிகள் வேறு வழியின்றி சொகுசு பஸ்களில் கூடுதல் கட்டணம் கொடுத்துப் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே சாதாரண கட்டண பஸ்களைக் குறைக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும். இரவு 9:00 மணிக்கு மேல் பஸ்களின் எண்ணிக்கையும் திடீரெனக் குறைக்கப்படுகிறது. இதனால் பயணிகள் அவதிப்படுகின்றனர் என்றனர்.

மகளிருக்கான வெற்றி இலவச பயண திட்டத்தை செயல்படுத்த 12 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என அரசு போக்குவரத்து கழகங்கள் கோரிக்கை விடுத்த நிலையில், 6,000 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

‘சிறைச் சரித்திரம்’ படைக்கும் ‘டம்மி’ விஜய் ஆட்சியில்

சேலம் காவல் நிலையத்திலும் கைதிகள் தப்பி ஓட்டம்!

செயலிழந்து தவிக்கும் சட்டம் – ஒழுங்கு!

சேலம், அக். 29 -

சேலம், ஆட்டையாம்பட்டி போலீஸ் ஸ்டேஷனில், 15க்கும் மேற்பட்ட வழிப்பறி, அடிதடி, கொலை வழக்குகளில் தொடர்புடைய, ‘ஏ’ கிரேடு குற்றவாளிகளான ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த பிரபு, சந்தோஷ் குமார், முத்தனம்பாளையத்தைச் சேர்ந்த தேவராஜ் ஆகிய மூவரை கைது செய்து, ஸ்டேஷனுக்கு கொண்டு வந்தனர்.

ஸ்டேஷனில் போலீசார் தேவர் ஜெயந்தி விழா பாதுகாப்பு பணிக்குச் சென்ற நிலையில், குறைந்த போலீசார் மட்டுமே பணியில் இருந்தனர். ரவுடிகளிடம் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த, மாலை ஜீப்பில் ஏற்றிச்செல்ல முயன்றனர்.

அப்போது, பிரபு, சந்தோஷ் குமார் ஆகியோர் கழிப்பறை செல்ல வேண்டும் என கூறியதால், ஸ்டேஷன் பின்புறம் உள்ள கழிப்பறைக்கு செல்ல அனுமதித்தனர். கண்ணிமைக்கும் நேரத்தில் இருவரும், ஸ்டேஷன் சுற்றுச்சுவரை தாண்டி குதித்து தப்பி ஓடினர். தப்பி ஓடியவர்களை பிடிக்க தனிப்படை அமைத்துள்ளனர்.

தேனி சிறையில் கைதிகள் தப்பிய நிலையில், போலீஸ் ஸ்டேஷனில் இருந்து இரு கைதிகள் தப்பியது. சேலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

